தரம் 10 11

O/L

# தமிழ்

மொழியும் இலக்கியமும்

# திணை, பால், எண், இடம்

ZOOM ONLINE CLASS

சரியான றைத்
தெ யுங்கள்

TUTE 51



The Best TAMIL ACADEMY
அகரம்
தினேஸ் ONLINE ACADEMY

REGISTER NOW 0778054232

தமிழ் ஆசான்
"அகரம் தினேஸ்"
SLTS, BA (honours) IN TAMIL DIP IN G'D & ARTIFICIAL INTERLLIGENCE

05 வருட காலமாக வெற்றிகரமாக இயங்கி வரும் கல்வி நிறுவனம்

**திணை, பால், எண், இட, காலம்**

**திணை**

திணை என்பது பிரிவினைக் குறிக்கும். தமிழ் மொழியிலே திணையை இரண்டு வகைப்படுத்துவர்.

1) உயர் திணை - மக்கள், தேவர், அரக்கர் என்போர் உயர் திணை

உதாரணம் - அப்பா, அம்மா, மாணவன், சிறுமி, குழந்தை, அரக்கன், வந்தான், படித்தான்,

2) அஃறிணை - மக்கள், தேவர், அரக்கர் அல்லாத உயிருள்ள, உயிரற்ற அனைத்தும் அஃறிணை எனப்படும்.

உதாரணம் - மரம், வீடு, பறவை, கதிரை, பாடசாலை, பறந்தது, ஓடின

**பால்**

பால் என்பது திணையின் உட்பிரிவாகும்.

உயர்திணையில் ஆண்களைக் குறிப்பது ஆண்பால். பெண்களைக் குறிப்பது பெண்பால். ஆண் பெண் இருபாலரைக் குறிப்பது பலர் பால்.

ஆண்பால் - தம்பி, அப்பா, கண்ணன், வந்தான்,

பெண்பால் - தங்கை, அம்மா, பார்வதி, சென்றாள்.

பலர்பால் - மாணவர்கள், நண்பர்கள், வந்தார்கள், ஓடினர்

அஃறிணையில் ஆண், பெண் பாகுபாடின்றி ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால், பலவற்றைக் குறிப்பது பலவின் பால்.

ஒன்றன் பால் - நாய், மாடு, மரம், விழுந்தது, வீடு,

பலவின்பால் - மாடுகள், மரங்கள், நாய்கள், ஓடின, பாய்ந்தன.

**எண்**

பொருட்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். எண் இரண்டு வகைப்படும். அவை

AGARAM DHINES

01) ஒருமை - ஒன்றைக் குறிப்பது ஒருமை

உதாரணம் - கடல், மாணவன், அதிபர், மாடு, நின்றான், பார்த்தது

02) பன்மை - பலவற்றைக் குறிப்பது பன்மை

உதாரணம் - பறவைகள், பூக்கள், வந்தார்கள், அவர்கள், ஓடின, சென்றனர்.

**இடம்**

இடங்கள் மூன்று வகைப்படும். அவையாவன, தன்மை, முன்னிலை, படர்க்கை

**தன்மை**

பேசுவோனைக் குறிக்குப்பது தன்மை ஆகும்.

**உதாரணம் - நான், நாங்கள், யான், யாம், என், என்னுடைய, எனது, எழுதுவேன்,**

**முன்னிலை**

பேசுவோனுக்கு முன்னால் இருப்போரைக் குறிப்பது முன்னிலை எனப்படும்.

உதாரணம் - நீ, நீர், நீங்கள், நீவிர், வந்தாய், சென்றாய், சென்றீர்கள்

**படர்க்கை**

தன்மைப் பெயர்களும் முன்னிலைப் பெயர்களும் அல்லாத பேசப்பவனவற்றைக் குறிப்பது படர்க்கை எனப்படும்.

உதாரணம் - அவன், அது, அவை, அவர்கள், கண்ணன், மாலா, வீடு, ஓடினான்,

**காலம்**

காலம் மூன்று வகைப்படும். அவையாவன இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.

இறந்தகாலம் - நடந்துமுடிந்தவற்றைக் குறிப்பது.

உதாரணம் - சாப்பிட்டான், விழுந்தது, வந்தாய், சென்றான்.

நிகழ்காலம் - நடந்து கொண்டிருப்பதைக் குறிப்பது

உதாணரம் - படிக்கிறான், படிக்கின்றான், வருகின்றேன்.

எதிர் காலம் - எதிர்காலத்தில் நடக்கவிருப்பதைக் குறிப்பது.

உதாரணம் - படிப்பான், வருவான், சாப்பிடுவேன், ஓடுவாள்

AGARAM DHINES

**வினைச் சொற்களில் திணை பால், எண், இடம், காலம் என்பவற்றை கண்டறிதல்.**

**படிக்கின்றான்**

திணை - உயர்திணை

பால் - ஆண்பால்

எண் - ஒருமை

இடம் - படர்க்கை

காலம் - நிகழ்காலம்

**வந்தன**

திணை - அஃறிணை

பால் - பலவின்பால்

எண் - பன்மை

இடம் - படர்க்கை

காலம் - இறந்தகாலம்

**பொதுப் பெயர்ச் சொற்கள்**

பொதுப் பெயர்ச் சொற்கள் இரண்டு வகைப்படும்

1) உயர்திணை இருபாற் பொதுப் பெயர்.

சில பெயர்ச்சொற்கள் உயர்திணை ஆண் பாலுக்கும், பெண்பாலுக்கும் பொதுவாக வரும். உதாரணம் - ஏழை, ஜனாதிபதி, மேதை, வாதி, பிள்ளை, புலவர், நோயாளி, உலோபி, அதிதி, புத்திசாலி, அமைச்சர்,

2) இருதிணைப் பொதுப்பெயர்

சில பெயர் சொற்கள் உயர்திணை, அஃறிணை ஆகிய இருதிணைக்கும் பொதுவாக வரும்.

உதாணரம் - தாய், தந்தை, ஆண், பெண், தான், தாம்





AGARAM DHINES